[1986 மே 3

பாரீஸ் கலைவிழாவிற்கு தஞ்சை ஓவியங்கள்.

621—(*வினா எண் 2980) திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு ஊரகத்தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாரீஸ் நகரில் நடைபெறும் கலை விழாவுக்கு பூம்புகார் விற்பனை நிலையம் மூலம் தஞ்சை கலம் காரி ஓவியங்கள் அனுப்பப்பட உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்: (அ) மற்றும் (ஆ): அவையின் முன் ஓர் விவர அறிக்கை * வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பாரீஸ் நகரில் நடைபெறும் கலைவிழாவிற்கு, ஒரு வயதான ஆணுக்கும், பெண்ணுக்கும் உள்ள தூய அன்பை—காதலை, சிறிதுகூட ஆபாசம் இல்லாமல் தமிழகத்தின் இயற்கைச் சூழலில் படம் பிடித்துக் காட்டும் வகையில் அமைந்துள்ள, நடிகர் திலகம் நடித்த 'முதல் மரியாதை' திரைப்படம் அனுப்பப்படுமா? ஏனென்றால், அந்தத் திரைப்படத்தைப் பார்க்கின்ற அந்த வெளிநாட்டினர், இந்தியாவிற்கு வர வேண்டும், இங்கேயுள்ள அழகிய கிராமங்கள் அடங்கிய பகுதிகளுக்கு விஜயம் செய்ய வேண்டுமென்று கருதி இங்கு வருவார்கள். அப்படி வெளிநாடுகளிலிருந்து அவர்கள் வருகை தந்தால் நமக்கு அன்னியச் செலாவணியும் அதிகமாக வருமே. எனவே, இதை அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இது பாரீசில் நடந்த ஓர் கலை விழாவிற்கு இங்கிருந்து அனுப்பப்பட்ட பொருட்கள் சம்பந்தப்பட்டது. பாரிஸ் நகர் கலைவிழாவிற்கு பூம்புகார் விற்பனை நிலையம் மூலம் தஞ்சாவூரில் தயார் செய்யப்பட்ட பல அலங்காரப் பொருட்கள் சென்னையிலுள்ள இந்திய அரசினுடைய கைத்திறன் மற்றும் கைத்தறிப் பொருட்கள் ஏற்றுமதி நிறுவனத்தின் மூலம் அனுப்பப்பட்டது பற்றிய வினா. இதற்கும் மாண்புமிகு உறுப்பினர் கேட்கும் கேள்விக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை.

---

* 447–448 பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப்பெற்றுள்ளது.